புதுச்சேரி அரசு
செய்தி மற்றும் விளம்பரத்துறை

எண்.1712/செவிது/உ.இ.(பத்திரிகை)/மதொஉ/2015-16 தேதி: 22.12.2015

**<u>சிறந்த பத்திரிகையாளர் மற்றும் சிறந்த புகைப்பட பத்திரிகையாளர் விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு</u>**

***

புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப்பரப்பில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர்களில் சிறந்த பத்திரிகையாளர் மற்றும் சிறந்த புகைப்பட நிருபர் ஒருவரை ஆண்டுதோறும் தேர்வு செய்து அவர்களுக்கு ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) மற்றும் பாராட்டுச் சான்றிதழ் ஆகியவைகளை வழங்கி கௌரவிக்க புதுச்சேரி அரசு முடிவு செய்து இதற்கான அரசாணையை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2015ஆம் ஆண்டிற்கான சிறந்த பத்திரிகையாளர் மற்றும் சிறந்த புகைப்பட பத்திரிகையாளர் விருதுக்கான விண்ணப்பங்கள் புதுச்சேரி ஒன்றிய ஆட்சிப் பரப்பில் பணியாற்றி வரும் பத்திரிகையாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் பத்திரிகையாளர்கள் புதுச்சேரி அரசின் இணையதளத்திலிருந்து (https://www.py.gov.in) இதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விதிமுறைகளை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன், 01.01.2015 முதல் 31.12.2015 வரையிலாக ஓராண்டு காலத்தில் தாங்கள் செய்த குறிப்பிடத் தகுந்த பணிகள் அல்லது செய்த சாதனைகளைத் தனியாகக் குறிப்பிட்டு, அதற்கான தகுந்த ஆதாரங்கள் / சான்றுகளை இணைத்து எதிர்வரும் 05.01.2016க்குள் செய்தி மற்றும் விளம்பரத்துறைக்கு கிடைக்குமாறு சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ந. உதயகுமார்)
இயக்குநர்

No.1712/DIP/AD(PRESS)/ADVT/2015-16